©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 8.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 8] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 21, 2018
மாசி 9, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 66, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 13 நவம்பர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 24–04–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2–ல், 289 முதல் 290 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/(LE)/332/2013-ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் தமிழ்நாடு மாநிலத்தில் காப்பிக் கொட்டையை பதப்படுத்தும் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ளவர்களும் கீழேயுள்ள விவர அட்டவணையின் (2)–ல் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுமாகிய பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**காப்பிக் கொட்டையை பதப்படுத்தும் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | **தொகுதி–I** | |
| 1. | உதவி மேலாளர் | மாதமொன்றுக்கு ரூ. 5792.00 |
| 2. | கணக்காளர் | மாதமொன்றுக்கு ரூ. 5479.00 |
| 3. | எழுத்தர்கள்/தட்டச்சர்கள்/காசாளர்கள் | மாதமொன்றுக்கு ரூ. 5402.00 |
| 4. | ஏவலர் | மாதமொன்றுக்கு ரூ. 5206.00 |
| 5. | காவலாள் | மாதமொன்றுக்கு ரூ. 5206.00 |
| 6. | குழந்தைகள் காப்பகத்தின் பணிப்பெண் | மாதமொன்றுக்கு ரூ. 5175.00 |

| *தொடர் எண்* | *பணியாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **தொகுதி–II** | | |
| 1. | மின்கம்மியர் | மாதமொன்றுக்கு ரூ. 5598.00 |
| 2. | தச்சர் | மாதமொன்றுக்கு ரூ. 5402.00 |
| 3. | பொருத்துநர் | மாதமொன்றுக்கு ரூ. 5326.00 |
| 4. | என்ஜின் ஓட்டுநர் | மாதமொன்றுக்கு ரூ. 5598.00 |
| 5. | எந்திரக் கம்மியர் | மாதமொன்றுக்கு ரூ. 5554.00 |
| **தொகுதி–III** | | |
| 1. | பணியிட (Yard) கண்காணிப்பாளர் | மாதமொன்றுக்கு ரூ. 5792.00 |
| 2. | மேஸ்திரி | மாதமொன்றுக்கு ரூ. 5326.00 |
| **பதப்படுத்தாத காப்பிக் கொட்டையை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் இருப்பு வைக்கும் பணிகள்** | | |
| 1. | லாரியிலிருந்து காப்பிக்கொட்டையை இறக்கி குவித்து வைத்தல் | டன் ஒன்றுக்கு ரூ. 43.33 |
| 2. | முதல் நாள் உலர வைப்பதற்கு | டன் ஒன்றுக்கு ரூ. 28.44 |
| 3. | மேலும் ஒரு நாள் உலர வைப்பதற்கு | டன் ஒன்றுக்கு ரூ. 16.01 |
| 4. | சேமிப்புக் கிடங்கிற்கு எடுத்துச் செல்லுவதற்கு | டன் ஒன்றுக்கு ரூ. 13.87 |
| 5. | மீண்டும் ஓரிடத்தில் குவித்து வைப்பதற்கு | டன் ஒன்றுக்கு ரூ. 14.95 |
| 6. | ஒரு சேமிப்புக் கிடங்கிலிருந்து மற்றொரு கிடங்கிற்கு எடுத்துச் சென்று குவித்து வைப்பதற்கு | டன் ஒன்றுக்கு ரூ. 29.89 |
| 7. | சேமிப்புக் கிடங்கு (எடைபோடுதல்) | டன் ஒன்றுக்கு ரூ. 1.24 |
| 8. | காப்பிக் கொட்டைகளில் தோல் நீக்குதல் | டன் ஒன்றுக்கு ரூ. 61.93 |
| 9. | தோல் நீக்கிய நிலையில் அரைக்கப்பட்ட காப்பி | டன் ஒன்றுக்கு ரூ. 37.19 |
| 10. | மலைத்தோட்டத்திலிருந்து (Estate) அரைக்கப்பட்ட காப்பிக் கொட்டைகளை லாரியிலிருந்து இறக்குதல் மற்றும் குவித்து வைத்தல் | டன் ஒன்றுக்கு ரூ. 34.58 |
| **பதப்படுத்தப்பட்ட காப்பிக் கொட்டை** | | |
| 1. | மாற்றப்பட்ட மொத்த அளவு (பதப்படுத்தும் கிடங்கிலிருந்து) (From Gardling shed) | 50 கிலோ ஒன்றுக்கு ரூ. 1.45 |
| 2. | வழங்கப்பட்ட மொத்த அளவு (முழுமையாக பதப்படுத்தல்) | பை ஒன்றுக்கு ரூ. 3.65 |
| 3. | கலக்கப்பட்ட காப்பிக்கொட்டையின் மொத்த அளவு (பெருமளவு) | டன் ஒன்றுக்கு ரூ. 14.95 |
| 4. | மொத்தமாக ஓரிடத்தில் சேர்த்து வைத்தல் | டன் ஒன்றுக்கு ரூ. 68.10 |
| 5. | மாதிரி வகைகளைப் பெறுதல் (Samples Drawing) | மாதிரி ஒன்றுக்கு ரூ. 2.49 |
| 6. | தோல் நீக்கப்பட்ட காப்பிக் கொட்டைகளை விற்பனை செய்வதற்காக சிப்பம் செய்து வழங்கல் (சந்தைப்படுத்துதல் நீங்கலாக) | |
| | சிப்பம் செய்தல் மற்றும் எடைபோடுதல் | ரூ. 49.53 டன் ஒன்றுக்கு ரூ. 92.86 |
| | மூட்டைகளைத் தைத்தல் | ரூ. 18.56 |
| | சுமை ஏற்றுதல் | ரூ. 24.77 |

| தொடர் எண் (1) | பணியாளர் வகைகள் (2) | | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (3) |
|---|---|---|---|
| 7. | ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கொட்டைகளை சிப்பம் செய்தல் மற்றும் வழங்குதல் (சிப்பம் செய்தல் நீங்கலாக) (60 கிலோ கிராம் கொண்டவையாக சிப்பம் செய்தல்) | | |
| | சிப்பம் செய்தல் மற்றும் எடைபோதுதல் | ரூ. 55.73 | டன் ஒன்றுக்கு ரூ. 105.27 |
| | மூட்டைகளைத் வைத்தல் | ரூ. 24.77 | |
| | சுமை ஏற்றுதல் | ரூ. 24.77 | |
| 8. | ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கொட்டைகளைச் சிப்பம் செய்தல் மற்றும் வழங்குதல் (சந்தைப்படுத்துதல் நீங்கலாக) 75 கிலோ கொண்டவையாக சிப்பம் செய்தல் | | |
| | சிப்பம் செய்தல் மற்றும் எடைபோடுதல் | ரூ. 55.73 | டன் ஒன்றுக்கு ரூ. 105.27 |
| | மூட்டைகளைத் தைத்தல் | ரூ. 24.77 | |
| | சுமை ஏற்றுதல் | ரூ. 24.77 | |
| 9. | வகை வாரியாக ஒதுக்கி வைத்தலுக்கான (Set apart) கட்டணங்கள் | | டன் ஒன்றுக்கு ரூ. 105.26 |
| 10. | குறியிடல் | | மூட்டை ஒன்றுக்கு ரூ. 1.84 |
| 11. | சாதராரண குறியிடல் | | மூட்டை ஒன்றுக்கு ரூ. 1.24 |
| 12. | ஜோட்டா (Jotta) கட்டணங்கள் | | ரூ. 37.19 (100 மூட்டைகளுக்கு) |
| 13. | பணிமனையில் சிப்பம் செய்தல் (Depot Packing) | | டன் ஒன்றுக்கு ரூ. 105.26 |
| 14. | நான்கு முனைகளிலும் தைத்தல் மற்றும் கயிறு கொண்டு கட்டுதல் R.C. | | |
| | கயிறு கொண்டு கட்டுதல் | ரூ. 37.19<br>ரூ. 24.74 | டன் ஒன்றுக்கு ரூ. 61.93 |
| 15. | காப்பிக் கொட்டையை ஏற்றுமதி செய்ய முத்திரையிடுவதற்கான கட்டணங்கள் | | டன் ஒன்றுக்கு ரூ. 12.40 |
| **எடுத்துச்** | **செல்வோர் :** | | |
| | மலைத்தோட்டம் – A மற்றும் C | | கிலோ ஒன்றுக்கு ரூ. 1.24 |
| | மலைத்தோட்டம் – B மற்றும் ப்பீபரி காப்பிக் கொட்டை | | கிலோ ஒன்றுக்கு ரூ. 1.45 |
| | ரொபெஸ்ட்டா A, B மற்றும் C | | கிலோ ஒன்றுக்கு ரூ. 1.24 |
| | அராபிகா செர்ரி மற்றும் ஏனைய தர வகைகள் | | கிலோ ஒன்றுக்கு ரூ. 1.90 |
| | காப்பிக்கொட்டை மூட்டைகள் சாக்கு மூட்டைகள் ஆகியவற்றை எடுத்துச் செல்லுதல், காப்பிக்கொட்டைகளைக் குவித்தல், தோல் நீக்குதல் எடை போடுதல் மற்றும் அபாயகரமான ஏனைய பணிகளில் ஈடுபடுத்தப்படுகிற நபர்கள் | | நாளொன்றுக்கு ரூ. 173.50 |
| | காப்பிக்கொட்டைகளைப் பரப்புதல், பெருக்குதல், உலர்த்துதல் சேர்த்து குவித்து வைத்தல், தைத்தல் ஆகியவற்றிலும், பணியிடத்திலுள்ள பதப்படுத்தப்படாத காப்பிக் கொட்டை மூட்டைகளைச் சிப்பம் செய்தல், எடை போடுதல் ஆகியவற்றிலும், காப்பிக்கொட்டை சாக்கு மூட்டைகளைக் கட்டுதல், காப்பிக்கொட்டைகளைப் பக்குவமாக உடைத்தலிலும் ஈடுபடுகிற நபர்கள். | | நாளொன்றுக்கு ரூ. 172.00 |

**விளக்கங்கள் : (1)** அகவிலைப்படி மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக்கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ. 1.05 (ஒரு ரூபாய் ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

| *தொடர் எண்* | *பணிகளின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட, முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) (i) ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாத ஊதியத்தை கணக்கிட, ஒரு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறவிடத்து, அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந.அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2ப) எண் 67, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 13 நவம்பர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 31–10–2012 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு—2 இல் 576—577 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/726/2012 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியான நாள் முதல் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | |
|---|---|---|
| *(1)* | *(2)* | |
| | *ரூபாய். காசு* | *ரூபாய். காசு* |
| ***I. நிருவாகம் :*** | *மண்டலம்—A* | *மண்டலம்—B* |
| | *(மாதமொன்றுக்கு)* | |
| 1. மேலாளர் | 7828.00 | 7641.00 |
| 2. உதவி மேலாளர் | 7660.00 | 7483.00 |
| 3. கணக்காளர் | 7660.00 | 7483.00 |
| 4. காசாளர் | | |
| 5. பண்டகசாலைக் காப்பாளர் | 7543.00 | 7375.00 |
| 6. தட்டச்சர் | | |
| 7. எழுத்தர் | 7443.00 | 7287.00 |

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (2)* | |
|---|---|---|
| | *ரூபாய். காசு மண்டலம்–A* | *ரூபாய். காசு மண்டலம்–B* |
| 8. நேரக்காப்பாளர் | (மாதம் ஒன்றுக்கு) | |
| 9. ஏவலாள் | 7267.00 | 7120.00 |
| 10. பாதுகாப்புப் பணியாளர் | | |
| 11. காவலாள் | | |
| 12. குற்றேவலாள் | 6951.00 | 6825.00 |
| **II. மேற்பார்வையிடுதல் :** | மண்டலம்–A | மண்டலம்–B |
| 1. முதலாள் | 7828.00 | 7641.00 |
| 2. மேற்பார்வையாளர் | 7660.00 | 7483.00 |
| 3. பொறுப்பிலுள்ள பணியாளர் | 7660.00 | 7483.00 |
| 4. பணிமனைக் கருவி காப்பாளர் | 7267.00 | 7120.00 |
| **III பயிற்சி பெற்றவர்:** | (நாளொன்றுக்கு) | |
| ஒரு குறிப்பிட்ட தொழிலில் 5 ஆண்டுகால அளவிற்கு அனுபவம் பெற்றுள்ள நபர்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட தொழிலில் 3 ஆண்டுகால அளவு அனுபவத்துடன் தொழிற்பயிற்சி நிலயத்தின் தொழிற் சான்றிதழை வைத்திருக்கும் நபர்கள் | 278.50 | 273.50 |
| **IV ஓரளவு பயிற்சி பெற்றவர்கள்:** | | |
| (i) தொழிற்பயிற்சி நிலயத்தின் (தரம்–I) தொழிற் சான்றிதழை வைத்திருக்கும் அனைவரும் | 271.00 | 265.00 |
| (ii) ஒரு குறிப்பிட்டத் தொழிலில் (தரம்–II) இரு ஆண்டுகளுக்குக் குறையாமல் உதவியாளர்களாகப் பணியாற்றிய நபர்கள் | 266.00 | 262.00 |
| **V பயிற்சி பெறாதவர்கள்:** | | |
| எந்த பயிற்சியும் தேவைப்படாத வேலையை செய்து கொண்டிருக்கும் நபர்கள் | 258.50 | 255.00 |

**விளக்கங்கள்:**

**I. மண்டலங்களின் வகைப்பாடு :** மண்டலம் – A மற்றும் மண்டலம் – B கீழேயுள்ள பகுதிகளைக் கொண்டிருக்கும் :

**மண்டலம் – A :** அனைத்து மாவட்டத் தலைமையிடங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள்

**மண்டலம் – B :** ஏனைய இடங்கள்

**II. (1) அகவிலைப்படி :** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

**(a)** மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஊதியங்கள், 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் வேறுபடத்தக்க அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ.42.35 காசுகள் (நாற்பத்தி இரண்டு ரூபாய் மற்றும் முப்பத்தி ஐந்து காசுகள் மட்டும்) வீதம் வழங்கப்பட வேண்டும்.

**(b)** முந்தைய ஆண்டின் ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான, முந்தைய 12 மாதங்ளுக்கான, நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி திருத்தம் செயலுக்கு வரும்.

(c) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) (a) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(b) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந.அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 68, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 13 நவம்பர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவின் (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 11–09–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு–2இல் 618–619 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/700/2013ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, அறிவிக்கையினை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு மாநிலத்தில் தேங்காய் உரித்தல் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கும் வரும்.

## விவர அட்டவணை

## தேங்காய் உரித்தல் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணிகளின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | |
| 1. | **தேங்காய் உரித்தல்:** | | |
| | (i) காலத்திற்கேற்ற ஊதியம் | நாளொன்றுக்கு | ரூ. 232.00 |
| | (ii) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் | 1000 தேங்காய்களுக்கு | ரூ. 294.00 |
| 2. | **மரம் ஏறுதல் மற்றும் தேங்காய் பறித்தல்:** | | |
| | (i) காலத்திற்கேற்ற ஊதியம் | நாளொன்றுக்கு | ரூ. 232.00 |
| | (ii) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் | மரம் ஒன்றுக்கு | ரூ. 4.12 |
| 3. | **தேங்காய்களை தரம் பிரித்தல்** | | |
| | (i) காலத்திற்கேற்ற ஊதியம் | நாளொன்றுக்கு | ரூ. 194.50 |
| | (ii) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் | 1000 தேங்காய்களுக்கு | ரூ. 30.87 |
| 4. | தேங்காய்களை ஏற்றி இறக்குதல் | 1000 தேங்காய்களுக்கு | ரூ. 294.00 |
| 5. | பயிற்சி பெறாத தொழிலாளர்கள் | நாளொன்றுக்கு | ரூ. 189.00 |
| 6. | மரங்களை சுத்தப்படுத்துதல், உரமிடுதல் மற்றும் பூச்சிக்கொல்லியிடுதல் | மரம் ஒன்றுக்கு | ரூ. 9.80 |

**விளக்கங்கள்:**

**(1) அகவிலைப்படி :** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய விதங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், திங்கள் ஒன்றுக்கு ரூ.01.15 (ரூபாய் ஒன்று மற்றும் பதினைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு, செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 69, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 13 நவம்பர் 2017.]*

1948–ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) ஆம் பிரிவைச் சேர்ந்த 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 10–04–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2 இல் 249 முதல் 250 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/(LE)302/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்கு பதிலாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் அப்பளம் தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

2. இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**அப்பளம் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| | *தொழிலாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | |
|---|---|---|---|
| | | *மண்டலம்–1* *(ரூ. காசு)* | *மண்டலம்–2* *(ரூ. காசு)* |
| | *(1)* | *(2)* | *(3)* |
| (1) | சிப்பம் செய்பவர் | 5929.00 மாதம் ஒன்றிற்கு | 5799.00 மாதம் ஒன்றிற்கு |
| (2) | கணக்காளர் | 6050.00 மாதம் ஒன்றிற்கு | 5929.00 மாதம் ஒன்றிற்கு |
| (3) | எடையிடுபவர்/உதவியாளர் | 5929 மாதம் ஒன்றிற்கு | 5799.00 மாதம் ஒன்றிற்கு |
| (4) | நறுக்குதல் (100 கிலோ கிராம் ஒன்றுக்கு) | 487.70 | 367.63 |
| (5) | கலவை (100 கிலோ கிராம் ஒன்றுக்கு) | 570.23 | 420.17 |

(6) அப்பளம் தயாரித்தல்

| | | |
|---|---|---|
| (i) அப்பளங்கள் (3 அங்குலம்) அல்லது 7.6 செ.மீ. (விட்டம்), 100 எண்ணிக்கை (300 கிராம்) | 9.45 | 6.79 |
| (ii) அப்பளங்கள் (4 அங்குலம்) அல்லது 10.2 செ.மீ. (விட்டம்), 100 எண்ணிக்கை (400 கிராம்) | 12.07 | 8.90 |
| (iii) அப்பளங்கள் (5 அங்குலம்) அல்லது 12.7 செ.மீ. (விட்டம்), 100 எண்ணிக்கை (500 கிராம்) | 17.86 | 13.14 |
| (iv) அப்பளங்கள் (6 அங்குலம்) அல்லது 15.2 செ.மீ. (விட்டம்), 100 எண்ணிக்கை (700 கிராம்) | 19.95 | 14.74 |

**விளக்கங்கள்:—**(1) மண்டலம்—I மற்றும் மண்டலம்—II இல் பின்வரும் பகுதிகள் அடங்கும்.

**மண்டலம்:—**I: அனைத்து மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை மற்றும் தெரிவுநிலை நகரியங்கள் உட்பட சிறப்பு நிலை மற்றும் தெரிவுநிலை நகராட்சிகள்.

**மண்டலம்:—**II: ஏனைய பகுதிகள்.

(2) **அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது திங்கள் ஒன்றுக்கு ரூ. 36.00 (முப்பத்தாறு ரூபாய் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* அகவிலைப்படியானது, ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான முந்தைய 12 மாதங்களுக்கான விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டில் சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும் போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிட மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) இங்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்கிறவிடத்து அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 70, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 13 நவம்பர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 10—04—2013—ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு – 2இல் 251 முதல் 253 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/304/2013—ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்தப்பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச்சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும் பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 9ஆம் பிரிவைச் சோந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ. காசு.* | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | |
| | **தொகுதி-I-(பயிற்சி பெற்ற தொழிலாளர்கள்)** | | |
| 1. | கருமார்கள் | 5170.00 | மாதம் ஒன்றுக்கு |
| 2. | மரவேலை செய்பவர்கள் (குச்சர்கள்) | | |
| 3. | பொருத்துநர்கள் | 5243.00 | மாதம் ஒன்றுக்கு |
| 4. | மின் கம்மியர்கள் | | |
| 5. | எந்திரக்கம்மியர் | 5170.00 | மாதம்ஒன்றுக்கு |
| 6. | கொத்தனார்கள் | | |
| 7. | இயக்குபவர்கள் | 5170.00 | மாதம் ஒன்றுக்கு |
| 8. | எஞ்சின் ஓட்டுநர்கள் | | |
| 9. | பற்ற வைப்பவர்கள் | | |
| 10. | அச்சு தயாரிப்பவர்கள் | 5243.00 | மாதம் ஒன்றுக்கு |
| | **தொகுதி-II நிலை—I தொழிலாளர்கள்:** | | |
| 1. | வார்ப்பட உதவியாளர்கள் (Mould Helpers) | | |
| 2. | மண்ணை அழுத்தி வழவழப்பாக்குபவர் | | |
| 3. | செங்கற்களைத் தயாரிப்பவர்கள் (அல்லது) ஓடுகள் தயாரிப்பவர்கள் | | |
| 4. | அச்சிலிருந்து எடுப்பவர்கள் (Die Pullers) | | |
| 5. | களி மண்ணை துண்டமாக வெட்டுபவர்கள் மற்றும் மண்ணை மிதிப்பவர்கள் | | |
| 6. | களிமண்ணை கலப்பவர்கள் | 181.50 | நாள் ஒன்றுக்கு |
| 7. | செங்கற் சூளையில் சுமை ஏற்றுபவர்கள் மற்றும் இறக்குபவர்கள் | | |
| 8. | சூளையிற் சுட்ட செங்கற்களை வகைப்படுத்துபவர்கள் மற்றும் சிப்பம் செய்பவர்கள் (அடுக்குவது உட்பட) | | |
| 9. | உருளையை சுழற்றுபவர்கள் | | |
| 10. | ஓடுகளை ஒழுங்காக வெட்டுபவர்கள் (Tile Trimmers) | | |
| 11. | செயற்கை முறையில் செங்கற்களை உலர வைக்கும் பணியில் ஈடுபடும் உதவியாளர்கள் | | |
| 12. | சூளை எரிப்பவர்கள் | | |
| 13. | பாதுகாவலர் அல்லது காவலாள் | | |

**தொகுதி-III நிலை—II தொழிலாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொருட்களைக்கையாளும் தொழிலாளர்கள் | | |
| 2. | பொருட்களைக்கொண்டு செல்பவர்கள் | 173.50 | |
| 3. | உதவியாட்கள் | 173.50 | |
| 4. | ஓடுகளைக்கொண்டுசெல்பவர்கள் | 173.50 | |
| 5. | எரிபொருட்களைக்கொண்டுச்செல்பவர்கள் | 173.50 | |
| 6. | களிமண்ணைக்கொண்டுசெல்பவர்கள் மற்றும் எடுத்துச்செல்பவர்கள் | 173.50 | |
| 7. | ஏற்றி இறக்கும் பணியை மேற்கொள்ளும் உதவியாளர்கள் | 173.50 | |
| 8. | பாளங்களை வெட்டுபவர்கள் மற்றும் பாளங்களை எடுத்துச்செல்பவர்கள் | 173.50 | |
| 9. | களிமண் வழங்குவோர் (Clay Feeders) | 173.50 | |
| 10. | பொதுவான கூலிவேலை செய்யும் தொழிலாளர்கள் | 173.50 | |
| 11. | சிலாப் பிளேசர்ஸ் (Slab Placers) | 173.50 | நாள் ஒன்றுக்கு |
| 12. | துப்புரவாளர்கள் | 173.50 | |
| 13. | சட்டத்திலிருந்து சுடப்படாத ஓடுகளை எடுப்பவர்கள் | 173.50 | |
| 14. | சுடப்படாத செங்கற்கள் மற்றும் ஓடுகளை எடுத்துச்செல்பவர்கள் | 173.50 | |
| 15. | செங்கல் தயாரிப்புக் கருவியை வழங்குபவர்கள் (Pallet Suppliers) | 173.50 | |
| 16. | செங்கல் தயாரிப்புக்கருவியை சேகரிப்பவர்கள் (Pallet Collection) | 173.50 | |
| 17. | நீர்கொண்டு செல்பவர்கள் | 173.50 | |
| 18. | மணல் மற்றும் சிமிட்டியை கலப்பவர்கள் (மொசைக்) | 173.50 | |
| 19. | மொசைக்கற்களை தலைச்சுமையாக எடுத்துச் செல்லும் தொழிலாளர்கள் | 173.50 | |
| 20. | மணல் வழங்குபவர்கள் (மொசைக்) | 173.50 | |
| 21. | ஓடுகளை ஒட்டுபவர்கள் (மொசைக்) | 173.50 | |
| 22. | பெட்டி அகற்றுபவர்கள் (மொசைக்) (Box Removers) | 173.50 | |
| 23. | வண்ணங்கள் கலப்பவர்கள் (மொசைக்) | 173.50 | |
| 24. | சிப்ஸ்களை நேர்த்தியாக்குபவர்கள் (மொசைக்) (Chips Sorenmers) | 173.50 | |
| 25. | I, II மற்றும் IV ஆம் தொகுதியின் கீழ் குறிப்பிடப்படாத173.50 ஏனைய தொழிலாளர்கள் | | |

**தொகுதி—IV—பணியாளர்:—**

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலாள் | 5989.00 | திங்கள் ஒன்றுக்கு |
| 2. | தொழில்நுட்ப மேற்பார்வையாளர் | 5697.00 | திங்கள் ஒன்றுக்கு |
| 3. | மேற்பார்வையாளர் | 5394.00 | திங்கள் ஒன்றுக்கு |
| 4. | எழுத்தர் | 5319.00 | திங்கள் ஒன்றுக்கு |

| | | |
|---|---|---|
| 5. | கணக்காளர் | 5697.00 திங்கள் ஒன்றுக்கு |
| 6. | பண்டகக்காப்பாளர் | 5394.00 திங்கள் ஒன்றுக்கு |
| 7. | அலுவலகப்பையன் | 4877.00 திங்கள் ஒன்றுக்கு |
| 8. | (i) மேஸ்திரி | 5319.00 திங்கள் ஒன்றுக்கு |
| | (ii) மேஸ்திரி<br>**(12ஆண்டுகளுக்கு மேலாக மேஸ்திரியாக பணியாற்றுபவர்கள்)** | 5451.00 திங்கள் ஒன்றுக்கு |
| | **செங்கல் தயாரிப்புக்கான கூலி:—** | |
| 1. | 1000 எண்ணிக்கையிலான சூளை செங்கற்களுக்கு | 492.25 |
| 2. | 1000 எண்ணிக்கையிலான நாட்டு செங்கற்களுக்கு | 369.34 |
| 3. | 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளைக்குக் கொண்டுச்செல்வதற்கு | 247.35 |
| 4. | 1000 எண்ணிக்கையிலான மேசை வார்ப்பு செங்கற்களுக்கு (Table Mould Bricks) | 615.92 |
| 5. | 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளையிலிருந்து ஏற்றி இறக்குவதற்கு | 61.90 |
| | சூளைக்கு மணலைக்கொண்டுவந்து சேம்பரில் பரப்புவதற்கு | 146.78 |
| | விறகு அல்லது நிலக்கரியை கொண்டுவர டன் ஒன்றுக்கு | 125.59 |
| | (அ) சூளையை எரிப்பவர் | 196.00 நாள் ஒன்றுக்கு |
| | (ஆ) மேசை வார்ப்பு செங்கற்களை வெட்டி எடுத்து ஒழுங்காக அடுக்குவதற்கு | 618.06 (1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு) |
| | (இ) சேம்பர் செங்கற்களுக்கு | 492.25 (1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு) |
| | (ஈ) செங்கல் அளவு (வரையறுக்கப்பட்ட செங்கல் அளவு 9"X4½"X3")<br>22.5 செ.மீ. X 11.25 செ.மீ. X 7.5 செ.மீ.<br>100 அடி தொலைவிற்குள் சுமை ஏற்ற வேண்டும். 100 அடி தொலைவிற்கு மேலாகச்சென்று சுமை ஏற்றப்படுமானால் அதற்கு பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொகை வழங்கப்படும். | 369.32 (1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு) |

**மொசைக் ஓடுகள் தயாரிப்பதற்கான ஊதியங்கள் :—**

| | | | |
|---|---|---|---|
| 1. | சிமிட்டியிலான தனிவகை ஓடுகள் | (i) ஓடுகள் தயாரிப்பவருக்கு | 209.00 நாள் ஒன்றுக்கு<br>181.50 நாள் ஒன்றுக்கு |
| 2. | மொசைக் ஓடுகள் | (ii) கலப்பவர் (Mixer) கலப்பதற்கானபடி | 26.15 நாள் ஒன்றுக்கு |
| | | (iii) உதவியாள் | 181.50 நாள் ஒன்றுக்கு |
| 3. | சிமிட்டி ஓடுகளைப்பதிப்பவர்கள் | | 181.50 நாள் ஒன்றுக்கு |
| 4. | வார்ப்பட இயக்குபவர்கள் | | 181.50 நாள் ஒன்றுக்கு |

**விளக்கங்கள்:—**

**(1)** மழைக்காலங்களில் பணி தொடங்கப்பட்ட பின்னர், மழையின் காரணமாக தொழிலாளர்கள் பணியை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுமாயின், பணி முடிக்கப்படுவதற்கு வழக்கமாக எவ்வளவு ஊதியத்தை அவர்கள் ஈட்டியிருப்பார்களோ, அத்தொகையில் 50 சதவீத தொகையைப்பெற அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

**(2) அகவிலைப்படி :** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், தொழிலாளர்களுக்கு பின்வரும் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படி, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது, அதாவது 2001 = 100 என்பதன் அடிப்படையில் 161 புள்ளிகள் ஆகும். 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 1.05 (ஒரு ரூபாய் மற்றும் ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழக்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படியானது, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் சராசரி விலைப்புள்ளியின் அடிப்படையில் ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) அன்றாட ஊதிய வீதம் மற்றும் அகவிலைப்படி என்பதில், விடுமுறை நாள் ஊதியமும் அடங்கும்.

(4) (i) நாள் ஊதியவீதங்களைக் கணக்கிடுவதற்கு, நாள் மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்கவேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியங்களைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்கவேண்டும்.

(5) ஒரே தன்மையுடைய பணியைச் செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(6) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மத்தியச்சட்டம் 63/1948) மற்றும் ஏனைய தொழிலாளர் நலச்சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் வராத செங்கல் மற்றும் ஓடுகள் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிலில் பணியிலமர்த்தப்பட்டுள்ளவர்களும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1958) கீழ் விடுப்புக்காலப் பயன்கள், நோய்க்கான சலுகைகள் அல்லது விடுமுறைகள் ஆகியவற்றையும், வருங்கால வைப்புநிதி மற்றும் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சலுகை ஆகியவற்றையும் பயன்படுத்த இயலாதவர்களும், மேற்சொன்ன சலுகைகளுக்குப் பதிலாக, தொகுதி–I மற்றும் தொகுதி–III-இன் கீழ் வரும் தொழிலாளர்களாக இருப்பின் அவர்களுக்கு நாளொன்றுக்கு 36.65 ரூபாயும், தொகுதி–II மற்றும் தொகுதி–IV-இன் கீழ்வரும் தொழிலாளர்களைப்பொறுத்த வரையில் நாளொன்றுக்கு 31.42 ரூபாயும், கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(7) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 71, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 13 நவம்பர் 2017.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1958) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 04–09–2013 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** *பாகம்* II பிரிவு 2ல் 604 மற்றும் 605 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/683/2013 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் பருத்தியில் கொட்டை நீக்குதல், பஞ்சு அடித்தல் மற்றும் கழிவுப் பஞ்சினை அகற்றும் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்படுள்ளது.

